**கடுவெல மாநகர சபை**
**கொழும்பு மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 26 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை 2020 ஆகஸ்ட் 27 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 டிசம்பர் 14 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டன.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பகுதியில் விபரிக்கப்பட்ட விடயங்களினாலான தாக்கத்தைத் தவிர, கடுவெல மாநகர சபையின் 2019 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 நவம்பர் 08 ஆந் திகதி முதலீடு செய்யப்பட்ட ரூபா 95,000,000 மக்கள் வங்கி வைப்பு தொடர்பாக 2019 டிசம்பர் 31 இல் உள்ளவாறு பெறப்பட வேண்டிய வட்டி கணக்கிலிடப்படவில்லை. | ஆண்டிற்குரிய வட்டி கணக்கிலிடப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டில் கணக்கிலிடப்படாத சேர்ந்து நின்ற வட்டி வருவாய் 2020 நாட்குறிப்பு 06 மூலம் கணக்கிலிடப்பட்டுள்ளது. |
| (ஆ) | உள்ளவாறு இருப்பதை உறுதி செய்ய முடியாத 1998 மற்றும் 1999 ஆம் ஆண்டுகள் தொடர்பில் கணக்குகளில் இருக்கும் ரூபா 7,561,332 பெறுமதியான மோட்டார் வாகனங்களும் வண்டிகளும் இயந்திரங்களும் உபகரணங்களும் கணக்கிலிடப்பட்டிருந்தன. | கணக்கிலிடப்பட்ட சொத்துக்கள் உள்ளனவா என இனங்காண வேண்டும். | கடுவெல மாநகர சபை பிரதே சபையாக இருந்த காலம் தொடக்கம் பொருட்களை இனங்காண்பதற்கான விதிமுறைகள் தயாரிக்கப்படாதிருந்தன. பொருட் கணிப்பு அறிக்கையின் பிரகாரம், பொருட்களை அழிக்கும் போதும் ஏலமிடும் போதும் அகற்றப்படும் பொருட்களது கிரயம் நிலையான சொத்துப் பேரேட்டிலிருந்து |

| | | | |
|---|---|---|---|
| | | | நீக்கப்படுவது சர்ச்சைக்குரியதாக உள்ளது. |
| (இ) | 2018 ஆம் ஆண்டில் ஏலத்திலிடப்பட்ட ரூபா 108,740 பெறுமதியான நிலையான சொத்துக்களது கிரயம் கணக்கிலிருந்து நீக்கப்படவில்லை. | ஏலமிடப்பட்ட சொத்துக்களது கிரயம் கணக்கிலிருந்து நீக்கப்பட வேண்டும். | ஏலமிடப்பட்ட சொத்துக்களில் இனங்காணப்பட்ட ரூபா 57,208 கிரயமானது நீக்கப்பட்டுள்ளது. எஞ்சிய ரூபா 51,532 இனங்காணப்பட்டு நீக்கப்படும். |
| (ஈ) | மீளாய்வாண்டில் உள்ளூராட்சித் திணைக்களத்திடமிருந்து கடனடிப்படையில் பெறப்பட்ட 03 கம்பெக்டர் வாகனங்களது கிரயமாகிய ரூபா 39,662,800 நிலையான சொத்துக்கள் மற்றும் களஞ்சியக் கையிருப்பு ஆகிய இரு கணக்குகளிலும் வரவு வைக்கப்பட்டும் உள்ளூராட்சிக் கடன் மற்றும் களஞ்சியக் கடன் கொடுத்தோர் ஆகிய இரு கணக்குகளிலும் செலவு வைக்கப்பட்டுமிருந்தது. இதனால் களஞ்சியக் கையிருப்புக் கணக்கு மற்றும் களஞ்சியக் கடன் கொடுத்தோர் கணக்கு என்பவற்றின் பெறுமதி அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தன. | தேவையான திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும். | சரியான முறைப்படி அக்கம்பெக்டர்களது பெறுமதி களஞ்சியக் கையிருப்பு கணக்கிலும் களஞ்சியக் கடன் கொடுத்தோர் கணக்கிலும் குறித்துக் கொள்ளப்பட முடியாது. இப்பிழையானது 44 ஆம் இலக்க நாட் குறிப்பின் மூலம் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. |
| (உ) | நகர அபிவிருத்தி அதிகார சபை வைப்புக் கணக்கில் செலவு வைக்கப்பட வேண்டிய தண்டப் பணமாகிய ரூபா 4,440,697 சபையின் வருவாயில் செலவு வைக்கப்பட்டதால் வைப்புக் கணக்கு மீதி அதேயளவு குறைத்தும் ஆண்டிற்கான மிகை அதேயளவு அதிகரித்தும் காட்டப்பட்டிருந்தன. | தேவையான திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும். | நகர அபிவிருத்தி அதிகார சபையின் பெயரில் பேணப்படும் சேமிப்புக் கணக்கில் அத்தொகையை வைப்பிலிடுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. எதிர்வரும் பொதுச் சபைக் கூட்டத்தில் அங்கீகாரம் பெறப்பட்டு பணம் வைப்பிலிடப்படும். |

### 1.3.2 கணக்கிணக்கம் செய்யப்படாத கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காணப்படும் 02 கணக்கீட்டு விடயங்களது மொத்தப் | கணக்கு மீதிகளை கணக்கிணக்கம் | வேறுபாட்டைக் கண்டறிய நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| பெறுமதிக்கும் அதனோடு தொடர்புடைய பட்டோலையில் காணப்படும் மொத்தப் பெறுமதிக்கும் இடையே ரூபா 18,866,775 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | செய்து திருத்தம் செய்ய வேண்டும். | எடுக்கப்பட்டுள்ளது. |

**1.3.3 பெறவேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்**

**(அ) பெற வேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) பெற வேண்டிய கணக்குகள் | | |
| முத்திரை பொறிக்கப்பட்ட 10 கடைகளிலிருந்து ரூபா 111,182 மற்றும் பத்தரமுல்ல டீ.சீ.வத்தயில் 13 காணித் துண்டுகளிலிருந்து ரூபா 39,930 என வாடகை நிலுவையாக இருந்தது. | பெற வேண்டிய மீதியை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | முத்திரை பொறிக்கப்பட்ட கடைகளை மீண்டும் கேள்விகள் கோரப்பட்டு வழங்கப்படுவதற்கும் நிலுவையை அறவிடுவதற்கு சட்ட ரீதியான நடவடிக்கை மேற்கொள்ளப்படவும் உள்ளது. |
| (ஆ) கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள் | | |
| 2013 முதல் முன்கொண்டு வரப்பட்டவாறிருக்கும் ரூபா 38,297,434 கடன் கொடுத்தோர் மீதி தீர்வு செய்யப்படாமலிருந்தது. | கொடுப்பனவு செய்ய வேண்டிய மீதியை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2013, 2014, 2015 ஆம் ஆண்டுகள் தொடர்பான கணக்கில் காணப்பட்டு தொடர்ந்தும் கொடுப்பனவு செய்யப் படுவதற்கு காட்டப்பட அவசியமற்ற மீதிகளை கணக்கிலிருந்து நீக்குவதற்கு 2018 டிசம்பர் 21 ஆந் திகதி பொதுச்சபைக் கூட்டத்தில் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. |

**1.3.4 கணக்காய்வுக்குத் தேவையான ஆவணச் சான்றின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஏற்றுக்கொள்ளக் கூடிய சான்றினை ரூபா 51,153,094 பெறுமதியான 03 கணக்கீட்டு விடயங்களின் பொருட்டு சமர்ப்பிக்காததால் கணக்காய்வில் | நிதிக் கூற்றுக்களில் காணப்படும் கணக்கீட்டு | எதிர்காலத்தில் திருத்தம் மேற்கொண்டு சான்றினை சமர்ப்பிப்பதற்கு |

| | | | |
|---|---|---|---|
| அவற்றை திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த / சரி, பிழை பார்க்க முடியவில்லை. | மீதிகளை உறுதி செய்வதற்கான சான்று சமர்ப்பிக்கப்பட வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்படும். |

## 1.4 இணங்காமை

### 1.4.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | மாநகர சபைகள் கட்டளைச் சட்டம் | 2019 டிசம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய 06 வருவாய் விடயங்களது நிலுவை அறவிடப்படவில்லை. | வருவாய் நிலுவை தாமதமின்றி அறவிடப்பட வேண்டும். | 2020.08.31 இல் உள்ளவாறான மீதி<br>தீர்வை 16,614,451<br>வீட்டு வாடகை 22,204<br>கடை வாடகை 710,000<br>வினோத வரி 399,584<br>17,746,239 |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | | | |
| (i) | நி.பி 371(5) | வழங்கப்பட்ட முற்பணமாகிய ரூபா 1,055,444 டிசம்பர் 31 க்கு முன்னர் தீர்வு செய்யப்படவில்லை. | வழங்கிய முற்பணத்தை தாமதமின்றி தீர்வு செய்ய வேண்டும். | தீர்வு செய்யப்படாத முற்பணத்தில் தற்சமயம் ரூபா 861,899 தீர்வு செய்யப்பட்டுள்ளது. |
| (ii) | நி.பி 571 | வைப்பிலிடப்பட்ட நாளிலிருந்து 02 ஆண்டுகளைக் கடந்த ரூபா 13,129,404 வைப்பு சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | காலங் கடந்த வைப்புக்களை தாமதமின்றி தீர்வு செய்ய வேண்டும். | மேற்படி 02 ஆண்டுகளைக் கடந்த வைப்புக்கள் (1,2,3 இல் குறிப்பிடப்பட்ட வைப்புக்களுக்குப் புறம்பாக ஏனைய வைப்புக்கள்) வருவாயிலிடப்படுவதற்கு முன்னர் வைப்பாளர்களுக்கு அறிவிக்கவும் அதற்கமைய நடவடிக்கை மேற்கொள்ளவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. |
| (இ) | ஏனைய சுற்றறிக்கைகள் | | | |
| (i) | 2016 யூலை 11 ஆந் திகதிய | இதுவரை சபைக்குரிய பொதுச் சொத்துக்கள் | சொத்துக்கள் சரியாக | அளவைகளை மேற்கொள்வதற்கான |

| | | | | |
|---|---|---|---|---|
| | LGD/08/2016 ஆம் இலக்க மேல் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கை | சரியாக அளவையிடப்பட்டு எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு இருக்கவில்லை. | அளவையிடப்பட்டு எல்லைகள் நிர்ணயிக்கப்பட வேண்டும். | உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டதையடுத்து 64 காணிகளது தகவல்கள் பதில் ஆணையாளார்களிடம் வழங்கப்பட்டுள்ளன. தற்சம்பயம் 15 காணிகளது நில அளவை முடிவடைந்து அளவை வரைபடங்கள் வழங்கப்பட்டள்ளன. அக்காணிகளில் அத்திவாரமிட்டு நிரந்தர எல்லைகள் நிர்ணயிக்குமாறு தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கு அவை அனுப்பப்பட்டுள்ளன. |
| (ii) | 1993 நவம்பர் 18 ஆந் திகதிய 15 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபையின் திட்டச்சுற்றறிக்கை | நகர அபிவிருத்திக்கென நடாத்தப்படும் வங்கிக் கணக்கில் உள்ள ரூபா 2,323,455 இனங்காணப்பட்ட செயற்திட்டம் ஒன்றிற்குப் பயன்படுத்தப்படவில்லை. | செயற்திட்டத்தை இனங்கண்டு அமுலாக்க வேண்டும். | இனங்காணப்பட்ட செயற்திட்டம் அங்கீகாரத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அங்கீகாரம் கிடைத்ததும் அதனை அமுலாக்க நடவடிக்கை எடுக்கப்படும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவிலும் கூடிய வருவாய் ரூபா 485,843,772 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 948,904,276 ஆகும்.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| செயற்படாதிருந்த மக்கள் வங்கியின் 196-1-001-6-3869561 இலக்க நடைமுறைக் கணக்கில் உள்ள ரூபா 542,612 மீதியை இனங்கண்டு தீர்வு செய்யவில்லை. | தாமதமின்றி தீர்வு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | கணக்குக் குழு வழங்கிய பணிப்புரைக்கமைய உள்ளூராட்சி திணைக்கள பரிசோதனை உத்தியோகத்தர்கள் மீதி தொடர்பாக விசாரித்தனர். மேலும், அது தொடர்பாக அறிவுறுத்தல் பெறப்பட்டதன் பின்னர் தேவையான நடவடிக்கை எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும். |

## 2.3 வருவாய் நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருவாய், பட்டியலிடப்பட்ட வருவாய், சேகரிக்கப்பட்ட வருவாய் மற்றும் வருவாய் நிலுவை என்பன.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கெனச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருவாய், பட்டியலிடப்பட்ட வருவாய், சேகரிக்கப்பட்ட வருவாய் மற்றும் வருவாய் நிலுவை தொடர்பான தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| | வருவாய் | 2019 மதிப்பிடப்பட்ட வருவாய் | 2019 பட்டியலிடப்பட்ட வருவாய் | 2019 சேகரிக்கப்பட்ட வருவாய் | 2019 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2018 மதிப்பிடப்பட்ட வருவாய் | 2018 பட்டியலிடப்பட்ட வருவாய் | 2018 சேகரிக்கப்பட்ட வருவாய் | 2018 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | தீர்வையும் வரியும் | 183,200,000 | 186,263,743 | 146,958,817 | 60,626,372 | 146,788,000 | 155,465,905 | 146,201,350 | 58,680,968 |
| (ii) | வாடகை | 12,095,000 | 8,730,336 | 7,347,641 | 1,259,341 | 21,980,505 | 19,511,569 | 17,753,272 | 2,749,197 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 13,500,000 | 9,736,966 | 9,736,966 | - | 15,720,000 | 16,891,953 | 16,841,953 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 1,006,133 | 715,745,598 | 322,632,304 | - | 705,689,700 | 1,066,603,602 | 464,861,872 | - |
| | | 209,801,133 | 920,476,643 | 486,675,728 | 61,885,713 | 890,178,205 | 1,258,473,029 | 645,658,447 | 61,430,165 |

### 2.3.2 தீர்வையும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கடுவெல மாவட்ட அலுவலகம், பத்தரமுல்ல அலுவலகம், அத்துருகிரிய அலுவலகம் என்பவற்றின் 2019 டிசம்பர் 31 இல் உள்ளவாறான தீர்வை நிலுவை ரூபா 52,740,966 ஆகும். அதில் 1 முதல் 10 ஆண்டுகளாக ரூபா 20,705,878 மற்றும் 10 ஆண்டுகளுக்கு அதிகமாக ரூபா 4,405,066 என நிலுவைகள் உள்ளடங்கியிருந்தன. | அறவிடப்பட வேண்டிய தீர்வையும் வரியும் தாமதமின்றி அறவிடப்பட வேண்டும். | மாவட்ட அலுவலகம் \| 2019.12.31 இல் உள்ள வாறான மீதி \| நிலுவையில் 2020.07.31 இல் உள்ளவாறு அறவிடப்பட்ட தொகை<br>கடுவெல \| 15,712,085 \| 4,101,281.75<br>பத்தரமுல்ல \| 23,614,458 \| 7,377,421.31<br>அத்துருகிரிய \| 13,414,423 \| 4,338,958.33 |

### 2.3.3 வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அத்துருகிரிய மெகாசிட்டி கடைத் தொகுதியில் உள்ள 03 கடைகள் மற்றும் பத்தரமுல்ல கடை | அறவிடப்பட வேண்டிய வாடகையைத் | வாடகை நிலுவையைச் செலுத்துமாறு குத்தகையாளருக்கு |

| | | |
|---|---|---|
| ஒன்றிலிருந்து வாடகை வருவாய் நிலுவையாகவிருந்த ரூபா 59,982 அறவிடப்படுவதற்கும் கடைகளைத் திறப்பதற்குமான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | தாமதமின்றி அறவிட வேண்டும். | அறிவிக்கப்பட்டுள்ளது. |

**2.3.4 ஏனைய வருவாய்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | வினோதவரி | | |
| | வினோதவரியாக 03 ஆண்டுகளுக்கும் அதிகமாக அறவிடப்பட வேண்டியுள்ள ரூபா 1,579,292 அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | அறவிடப்பட வேண்டிய வரி தாமதமின்றி அறவிடப்பட வேண்டும். | மொத்த நிலுவையை அறிவிடுவதற்கு வழக்கு தயாராகின்றது. |
| (ஆ) | வாரச் சந்தை வரி | | |
| | கடுவெல வாரச் சந்தையிலிருந்து 05 ஆண்டுகளுக்கு மேலாக அறவிடப்படாதிருக்கும் ரூபா 368,126 நடப்பாண்டிலும் அறவிடப்படவில்லை. | அறவிடப்பட வேண்டிய வரி தாமதமின்றி அறவிடப்பட வேண்டும். | இது 2012 ஆம் ஆண்டு தொடக்கம் உள்ள நிலுவை ஆகும். நிலுவை தொடர்பாக கணக்குக் குழுவின் பரிந்துரைக்கமைய விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அதன் அறிவுரைப்படி நடவடிக்கை எடுக்கப்படும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

மாநகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது நெடுஞ்சாலைகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காணப்படுகின்றன.

**(அ) உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் மேலதிக வருவாயை சம்பாதிப்பதற்கு உப விதி தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட வேண்டுமாயினும், 05 வருவாய் வழக்கு தொடர்பாக அவ்வாறு உப விதிகள் தயாரிக்கப்படாததால் மீளாய்வாண்டில் ரூபா 18,745,262 வருவாயைச் சம்பாதிக்க முடியாது போனது. | உப விதிகள் தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட வேண்டும். | அங்கீகாரத்தின் பொருட்டு உப விதிகள் உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன. |

**(ஆ) திண்மக்கழிவு முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையிடம் வாகனங்களும் ஊழியர்களுமாக வளம் இருந்த போதும் கழிவுப் பொருட்களை அகற்றுவதற்கு மீளாய்வாண்டின் போது 10 வெளி ஒப்பந்த நிறுவனங்களுக்கு ரூபா 65,107,270 வழங்கப்பட்டிருந்தது. | உப விதிகள் தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட வேண்டும். | அங்கீகாரத்தின் பொருட்டு உப விதிகள் உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன. |

## 3.2 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பொதுமக்களின் புகார்கள் | | |
| மீளாய்வாண்டின் போது பொது மக்களின் புகார்கள் மற்றும் அதிகாரமற்ற நிர்மாணிப்புப் பிரிவின் கீழ் 597 புகார்க்ள மாநகர சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. அவற்றுள் 148 புகார்கள் மாத்திரமே நடவடிக்கைக்கு உள்ளாகியிருந்தன. | பொதுமக்களின் புகார்கள் தாமதமின்றி நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்பட்டவாறுள்ளது. |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) பதவியணி வெற்றிடங்களும் மேலதிகமும் | | |
| 2019 டிசம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 31 வெற்றிடங்கள் இருந்தன. | அத்தியாவசிய பதவிகள் நிரப்பப்பட வேண்டும். | நிறைவேற்று தரம் - வேண்டுகோள் விடுக்கப்பட்டள்ளது.<br><br>இரண்டாம் நிலை - நீதிமன்ற நடவடிக்கை காரணமாக நிரப்ப முடியாதுள்ளது.<br><br>ஆரம்ப நிலை - தகைமை வாய்ந்தவர் இல்லாமை, அங்கீகாரத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது. |
| (ஆ) ஊழியர் கடன் | | |
| 2019 டிசம்பர் 31 இல் உள்ளவாறு வேலை இடமாற்றம் பெற்ற 31 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 1,507,762, ஓய்வுபெற்ற 40 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 539,860 வேலை இடைநிறுத்தப்பட்ட 08 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 125,848 மற்றும் சேவை விலகிய உத்தியோகத்தர் களிடமிருந்து ரூபா 1,186,486 என அறவிடப்பட வேண்டியிருந்தது. | ஊழியர் கடன் நிலுவை தாமதமின்றி அறவிடப்பட வேண்டும். | 2019 டிசம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய மீதிகளது கூட்டுத்தொகை ரூபா 85,455,855 ஆகும். அவ் உத்தியோகத்தர்களில் 10 பேர் சம்பளத்திலிருந்து கழிவாக ரூபா 1,294,261 செலுத்தியுள்ளனர். எதிர்காலத்தில் எஞ்சிய கடன் மீதியும் தீர்வு செய்யப்படும். |

**3.4 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) அத்துருகிரிய மாவட்ட அலுவலகத்தை அத்துருகிரிய மெகாசிட்டி கடைத்தொகுதியை அமைப்பதற்கென ஒப்பந்தகாரர் ஒருவருக்கு ரூபா 3,253,840 வழங்கப்பட்டு 1,300 சதுர அடி இரும்புத் தூணின் மீது தகடு | செலவு மேற்கொள்கையில் சபை முறையாகத் திட்டமிட்டுச் செயற்பட வேண்டும். | விடயத்தைக் கலந்துரையாடிய விசேட தொழில்நுட்ப குழு முன்மொழியப்பட்ட வேலைத்திட்டத்தை சபையின் தேவைக்கு முன்னுரிமை வழங்கி |

| | | | |
|---|---|---|---|
| | பதித்த கொங்கிறீட் ஸ்லெப் ஒன்று போடப்பட்டிருந்த போதும், 2019 டிசம்பர் 31 வரை உப அலுவலகம் அமைக்கப்படவில்லை. | | குறைந்த கிரயத்துடன் நேரடி தொழிலாளரைப் பயன்படுத்தியும் சமுதாய அடிப்பபடையிலான ஒப்பந்த அடிப்படையில் சபைக்கு மதியுரைச் சேவைகளை வழங்கும் கட்டமைப்புப் பொறியியல் அளவுப் பரிசீலனை மற்றும் வாஸ்து வித்தியாச அடிப்படையில் வேலையை நிறைவேற்றுவதற்கும் பரிந்துரை செய்துள்ளது. அதற்கமைய, தற்சமயம் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது |
| (ஆ) | ஜயவடனகம வீடமைப்புத் திட்டத்தின் குடியிருப்பாளர் மண்டபம் 2013 செப்டம்பர் 24 ஆந் திகதி தொடக்கம் மாதாந்தம் ரூபா 25,000 வீதப்படி வாடகைக்கு 03 ஆண்டு காலத்திற்கும் 2018 நவம்பர் 07 ஆந் திகதி கேள்விகள் கோரப்பட்டு மாதாந்தம் 70,000 வீதப்படியும் குத்தகைக்கு 05 ஆண்டுகளுக்கு வழங்கப்பட்டிருந்தன. | தேவைக்கு முன்னுரிமை வழங்கி நடவடிக்கை எடுக்க வேண்டும். | மண்டபத்தைக் குத்தகைக்கு வழங்கியதன் பின்னர் குத்தகை உடன்படிக்கையில் குறிப்பிட்டவாறு 13 ஆம் நிபந்தனை மீறப்படவில்லை என தயவுடன் அறிவிக்கின்றேன். |
| | குத்தகை உடன்படிக்கையின் 13 ஆம் பிரிவுக்கு முரணாக கட்டிடத்தின் தன்மை, மாதிரி வடிவம் என்பன மாற்றஞ் செய்யப்பட்டு விழா மண்டபமாக அதனை மாற்றியமையால் வீடமைப்புத் திட்டக் குடியிருப்பாளர்களுக்கு அவர்களது பொதுத் தேவைகளை நிறைவேற்ற இடம் இல்லாது போனது. | | ஜயவடனகம சனசமூக நிலையம் குத்தகைக்கு வழங்கப்படுவது சம்பந்தமாக ஏற்பட்ட உடன்படிக்கைப் பிரகாரம் வீடமைப்புத் தொகுதிக் குடியிருப்பாளர்களின் பொருட்டு 10 சதவீத தரகுடன் சேவை வழங்கப்பட வேண்டுமென உடன்படிக்கையின் 3 ஆம் பகுதியில் குறிப்பிபடப்பட்டுள்ளது என்பதைத் தெரிவிக்கின்றோம். |

## 3.5 சொத்து முகாமைத்துவம்

### 3.5.1 சொத்துக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பொது வசதிகளுக்கான காணியில் அத்துமீறிய குடியேற்றம்<br>காணிகளைத் துண்டுகளாக்கி விற்பனை செய்கையில் பொது வசதிகளுக்காக சபை பெற்றுக் கொண்ட 04 காணிகளில் தனி நபர்கள் அத்துமீறிக் குடியேறி இருந்தனர். | சபைக்குச் சொந்தமான காணிகளின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும். | எல்லைகளை உறுதி செய்து தேவையான நடவடிக்கைகள் மேற்கொண்டு எடுக்கப்படும். |

### 3.5.2 சுவீகரிக்கப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கடுவெல சந்தையை அமைப்பதற்கு 0.98211 ஹெக்டயர் காணியை சுவீகரிப்பதற்கு முகாமைத்துவச் சேவைக் கட்டணமாக ரூபா 6,600,000 மற்றும் சுவீகரிப்பின்போது இழப்பீடாக ரூபா 73,425,000 என ரூபா 80,025,000 மொத்தமாக நகர அபிவிருத்தி சபைக்கு வழங்கப்பட்டிருந்தது. இதற்காகப் பெறப்பட்ட ரூபா 40 மில்லியன் கடனின் பொருட்டு தவணைப் பணமாகவும் வட்டியாகவும் ரூபா 26,768,135 வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இதுவரை காணியின் உரித்தாளர்களுக்கு நகர அபிவிருத்தி சபை இழப்பீட்டை வழங்கியிருக்காததுடன் வாரச் சந்தை அமைந்துள்ள காணியை சபை சுவீகரிப்பதற்கான நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சுவீகரிப்பு நடவடிக்கை தாமதமின்றி நடைபெற வேண்டும். | மூல நில அளவை வரைபடம் இலக்கம் 9657 இல் குறிப்பிடப்படும் 01 முதல் 08 வரையான இலக்கங்களுக்குரிய காணித் துண்டுகளில் 01, 03,04, 06, 07 ஆம் இலக்க காணித் துண்டுகளுக்கான மதிப்பிடப்பட்ட இழப்பீட்டுத் தொகை ரூபா 350,355,050 ஆகும். இதில் 90 சதவீதமான ரூபா 315,319,500 குறித்த காணிகளுக்கான இழப்பீடாக 06 தவணைகளில் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு இழப்பீட்டுக்கு உரிய தரப்பினர்களுடன் பேச்சு வார்த்தை மேற்கொள்ளப்பட்டு இணைக்கம் காணப்பட்டது. அவற்றிற்குரிய சத்தியக் கடதாசிகள் தற்சமயம் பிரதேச செயலகத்திற்கு |

| | | |
|---|---|---|
| | | அனுப்பப்பட்டுள்ளன. குறித்த தொகையை வழங்கியதன் பின்னர் வாரச்சந்தையை சபைக்கு வழங்குமாறு நகர அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து பெற நடவடிக்கை மேற்கொள்ள முடியும். |

### 3.5.3 பயன்படுத்தப்படாத / குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பெறுமதி ரூபா 53,351,000 ஆகவுள்ள 03 கார்பட் பதிக்கும் இயந்திரங்கள், பெறுமதியை கண்டறிய முடியாத 03 டிறெயிலர்கள், 19 ஆயுர்வேத இலைக் கஞ்சி தயாரிக்கும் உபகரணங்கள் என்பன பயனற்றிருந்தன. | சொத்துக்கள் அதிக கூடுதலாகப் பயன்படுத்தப்பட வேண்டும். | பொருட்கணிப்பின் இறுதியில் இந்த உபகரணங்களைப் பயன்படுத்துவதற்கு / ஏலத்திலிட நடவடிக்கை எடுக்கப்படும். |

### 3.6 இனங்காணப்பட்ட இழப்புகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) கடுவெல உப அலுவலக களஞ்சியக் கூறில் இருந்த ரூபா 231,332 பெறுமதியான 234 கொடிக்கம்பங்கள் தொலைந்திருந்தன. | கொடிக் கம்பங்களைத் திருப்பி பெற வேண்டும். | இந்த 234 கொடிக் கம்பங்களையும் பெற்றுக் கொண்ட பிரஜா மண்டலவிடமிருந்து அவற்றைப் பெறுவதற்குத் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். கொடிக் கம்பங்கள் யாவும் தற்சமயம் எழுத்து மூலம் உத்தியோகத்தர் ஒருவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. |
| (ஆ) கடுவெல பஸ் தரிப்பிடத்தல் சுகாதார நடவடிக்கைகள், கழிவறைச் சுத்திகரிப்பு, சுத்திகரிப்பு நடவடிக்கைகள் என்பன 2019 பெப்ரவரி வரை | சபைக்குச் சாதகமல்லாத உடன்படிக்கை களில் ஈடுபடலாகாது. | கருத்து வெளியிடப்படவில்லை. |

சபை ஊழியர்களால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. வெளிநபர்கள் ரூபா 10 க்கான அனுமதிச்சீட்டை வழங்கி 2018 சனவரி தொடக்கம் 2019 பெப்ரவரி வரை சம்பாதித்த தொகை ரூபா 1,325,341 ஆகும். இது ஏறக்குறைய ரூபா 95,000 மாதாந்தத் தொகையாகும். அவ்வாறிருக்க, இச்சேவையை வெளிநபர்களுக்கு வழங்குவதற்கு 2018 டிசம்பர் 31 ஆந்திகதி பொருட் சபை தீர்மானித்திருந்தது. அதற்கமைய, கூறு விலைகள் கோரப்பட்டு மாதாந்தம் ரூபா 5,010 வீதப்படி மாதாந்த வாடகைக்கு பிரத்தியேக வழங்குநர் ஒருவரிடம் 2019 பெப்ரவரி 01 ஆந் திகதி ஒப்படைக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக, சபைக்கு மாதாந்ம் ஏற்பட்ட இழப்பு ஏறக்குறைய ரூபா 90,000 ஆகும்.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 ஆம் ஆண்டின் பொருட்டு சபையின் நிர்மாண வேலைகள், கழிவுப் பொருள் அகற்றும் நடவடிக்கைகள் செயற்பாட்டு நடவடிக்கைகள் என்பன தொடர்பாக போதிய உள்ளகக் கணிப்பு மேற்கொள்ளப்படவில்லை. | போதிய உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் போது 15 கணக்காய்வு ஐய வினாக்கள் உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தரால் எனக்கு வழங்கப்பட்டுள்ளன. அந்த ஐய வினாக்களுக்கு உட்படாத பிரிவுகள் தொடர்பாக மிகுந்த கவனம் செலுத்தப்பட்டு நடவடிக்கை எடுக்குமாறு உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தருக்கு அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்படும். |